# செப்டம்பர் - 28 - வியாழன்

## புனித வென்சன்ஸ்லாவுஸ்

**“மலைக்குச் சென்று மரம் கொண்டு வாருங்கள்: என் இல்லத்தை மீண்டும் கட்டியெழுப்புங்கள்: என் இல்லத்தை மீண்டும் கட்டியெழுப்புங்கள்: அது எனக்கு உகந்ததாய் இருக்கும்: அங்கே நான் மாட்சியுடன் விளங்குவேன்” ஆகா. 1:8**

### முதல் வாசகம் : ஆகாய் 1 : 1 – 8

தாரியு அரசனது இரண்டாம் ஆட்சியாண்டின் ஆறாம் மாதம் முதல் நாளன்று இறைவாக்கினர் ஆகாய் வாயிலாக ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. அது யூதாவின் ஆளுநரும் செயல்தியேலின் மகனுமான செருபாபேலுக்கும் தலைமைக் குருவும் யோசதாக்கின் மகனுமாகிய யோசுவாவுக்கும் அருளப்பட்ட செய்தி ”படைகளின் ஆண்டவர் கூறுவது இதுவே. “ஆண்டவரது இல்லத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்குரிய காலம் இன்னும் வரவில்லை என்று இந்த மக்கள் சொல்கிறார்கள்.அப்பொழுது இறைவாக்கினர் ஆகாய் வாயிலாக ஆண்டவரது வாக்கு அருளப்பட்டது. இந்தக் கோவில் பாழடைந்து கிடக்கும் இந்நேரத்தில், நீங்கள்மட்டும் மாட மாளிகைகளில் குடியிருக்கலாமா?“ஆதலால், இப்பொழுது படைகளின் ஆண்டவர் கூறுவதைக் கேளுங்கள் “உங்களுக்கு நிகழ்ந்திருப்பதை நினைத்துப் பாருங்கள்.நீங்கள் விதைத்தது மிகுதி, அறுத்ததோ குறைவு. நீங்கள் உண்கிறீர்கள் ஆனால் உங்கள் வயிறு நிரம்புவதில்லை. நீங்கள் குடியிருக்கிறீர்கள் ஆனால் நீங்கள் நிறைவடைவதில்லை. ஆடை அணிகிறீர்கள் ஆனால் உங்களுள் எவருக்கும் குளிர் நீங்கவில்லை. வேலையாள் தான் கூலியாக வாங்கிய பணத்தைப் பொத்தலான பையில் போடுகிறான்.உங்களுக்கு நேர்ந்துள்ளதை நினைத்துப் பாருங்கள்“ என்று சொல்கிறார் படைகளின் ஆண்டவர்.“எனவே, மலைக்குச் சென்று மரம் கொண்டு வாருங்கள் என் இல்லத்தை மீண்டும் கட்டியெழுப்புங்கள் அது எனக்கு உகந்ததாய் இருக்கும் அங்கே நான் மாட்சியுடன் விளங்குவேன்“ என்று சொல்கிறார் ஆண்டவர். மிகுதியான அறுவடைக்காகக் காத்திருந்தீர்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மக்கள் மீது விருப்பம் கொள்கிறார்

### நற்செய்தி : லூக்கா9: 7 – 9

அந்நாட்களில் நிகழ்ந்தவற்றையெல்லாம் குறுநில மன்னன் ஏரோது கேள்வியுற்று மனம் குழம்பினான். ஏனெனில் சிலர், ”இறந்த யோவான் உயிருடன் எழுப்பப்பட்டார்” என்றனர்.வேறு சிலர், ”எலியா தோன்றியிருக்கிறார்” என்றனர். மற்றும் சிலர், ”முற்காலத்து இறைவாக்கினருள் ஒருவர் உயிர்த்தெழுந்துள்ளார்” என்றனர்.ஏரோது, ”யோவானின் தலையை நான் வெட்டச் செய்தேனே! இவர் யாரோ? இவரைப் பற்றி இவ்வாறெல்லாம் கேள்விப்படுகிறேனே!” என்று சொல்லி இயேசுவைக் காண வாய்ப்புத் தேடிக்கொண்டிருந்தான்.

**தியானம் :** கடவுளின் வழியில் அமையாத எந்த முயற்சியும் வெற்றிபெற மாட்டாது என்பதற்கு இன்றைய இறைவார்த்தைகள் உதாரணமாக அமைகின்றன. தாரியு மன்னனின் ஆட்சிக்காலத்தில் இஸ்ராயேல் மக்கள் உழைப்பிற்கேற்ப பலனின்றி, எதிலும் நிறைவின்றி வாழ்ந்தார்கள். அவர்களிடையே தம் பிரசன்னத்தை உறுதிப்படுத்தவும், அவர்ளுக்கு மனநிறைவைத் தரவும் தமக்கென ஓர் இல்லத்தைத் தயார் செய்யும்படி கடவுள் கட்டளையிடுகின்றார். “மலைக்குச் சென்று மரம் கொண்டு வாருங்கள்” என்று அவர் பணித்தது, கல்லாரி மலையில் அமையப்போகும் சிலுவை மரத்தையும், அதில் பலியாகப்போகும் இயேசுவையும் முன்னடையாளப் படுத்துகின்றது. நாம் ஆயலங்கள் நிறைந்த நகரிலே இன்று வாழ்ந்தாலும், நமக்கென ஒரு ஆலயத்தை வாங்கினாலும், இறைமகன் இயேசுவின் பிரசன்னம் அங்கு உணரப்படும்வரை நம் வாழ்வில் மனநிறைவு இருக்கப்போவதில்லை. நாட்காட்டிகளில் இடம் இல்லாத அளவுக்கு நாம் புனிதர்களின் விழாக்களைச் சிறப்பிப்பது மிகவும் நல்லது. ஆனால், அத்தனை புனிதர்களும் காட்டும் வழியில் நாம் இயேசுவின் பிரசன்னத்தை உணரமுடியவில்லை என்றால் “சென்றடைய வேண்டிய ஊரைச் சென்றடையாமல் அதற்கு வழியாட்டும் வழிகாட்டிப் பலகைக்கு அருகில் நின்றுவிடும் வழிப்பயணிகளுக்கு ஒப்பாவோம்.” கடவுளைப் வழிபடுவதற்கும், அவரைப் போற்றுவதற்கும் பயன்படும் ஆலய வழிபாடுகளை முகப்புத்தகங்களில் விளம்பர நோக்கோடு பதிவு செய்வதைப்பற்றி சற்றுச் சிந்திப்போம். தேவகோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வோம். ஆலங்கள் இறைவனின் இல்லங்கள் என்பதை எப்போதும் மனதில் நிறுத்திவைப்போம்.